<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : CC.No.32/2022</u>
<u>வழக்கு சாட்சி PW-6</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.தேவி பிரபா கல்யாணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | உலகநாதன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.02.2026.

**(2, 4 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 23.05.2020 அன்று நான் பணியில் இருந்தபோது, காலை 07.15 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவிற்கு 52 வயது மதிக்கத்தக்க மாரியப்பன் என்பவரை அவரது அண்ணன் கருப்பன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண்கள், இரண்டு பெண்கள் கம்பியாலும், கம்பாலும் தாக்கியதாக கூறினார். இச்சம்பவம் 23.05.2020 ம் தேதி, காலை 06.30 மணியளவில் நடந்ததாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). வலது முன்தலைப்பகுதியில் 7 x 1.5 x 1 cm அளவில் சிதைவுக்காயம் காணப்பட்டது.

(2). வலது முழங்கைக்கு மேல் 7 x 5 cm அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது.

(3). வலது முழங்கையில் 4 x 5 cm அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது.

அதில் எலும்பு முறிவு இருந்ததாக சந்தேகிக்கப்பட்டதால், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து, அதன் பின்னர் 24.05.2020 அன்று மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அங்கிருந்து அவருக்கு வழங்கிய சிகிச்சை விபரச்சான்றின் அடிப்படையில் அங்கு அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட 1, 2 காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், 3 வது காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும்.

அன்றைய தினம் காலை 07.20 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவிற்கு 45 வயது மதிக்கத்தக்க பொன்னுத்தாய் என்பவரை அவரது மைத்துனர் கருப்பன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண்கள், இரண்டு பெண்கள் கம்பியாலும், கம்பாலும் தாக்கியதாக கூறினார். இச்சம்பவம் 23.05.2020 ம் தேதி, காலை 06.30 மணியளவில் நடந்ததாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

வலது முழங்கையில் 4 x 5 cm அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது. அதில் எலும்பு முறிவு இருந்ததாக சந்தேகிக்கப்பட்டதால், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து, அதன் பின்னர் 24.05.2020 அன்று மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அங்கிருந்து அவருக்கு வழங்கிய சிகிச்சை விபரச்சான்றின் அடிப்படையில் அங்கு அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். காயம்பட்டவர் சொன்ன மாதிரி கம்பு மற்றும் கம்பியால் தாக்கினால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

காயம்பட்ட நபர்கள் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று என்னிடம் கூறவில்லை. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று என்னிடம் கூறவில்லை. 2 நபர்களுக்கும் ஏற்பட்ட காயங்கள் வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கம்பியால் தாக்கும்போது, அந்த இடத்தில் எலும்புமுறிவு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான், சிதைவுக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் வீக்கக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. மாரியப்பன் என்பவருக்கு சிதைவுக்காயம் இல்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.21 17:16:32 +0530